Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 41/2025** |
| Deposition of witness for | :: | **PW. 13** |
| **Name** | :: | **முத்துலெட்சுமி ( காவல் ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 17.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.02.2024 ம் தேதி நான் அருப்புக்கோட்டை தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை தாலுகா வட்ட (பொறுப்பு) காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பாலமுருகன் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண். 16/2024 பிரிவுகள் 279, 337, 304A இதச வழக்கு கோப்பினை பார்வையிட்டு தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

2. பின்னர் இவ்வழக்கு விபத்திற்குள்ளான வாகனங்களை சார்பு ஆய்வாளர் ராபியம்மாள் விபத்தாய்விற்கு உட்படுத்தியிருந்தால் 05.05.2024 ம் தேதி அருப்புக்கோட்டை வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து விபத்தாய்வு அறிக்கைகள் பெற்று ஆய்வாளரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். (**TN 67 AC 0192 என்ற பதிவெண் கொண்ட பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை**

**அசாஆ.9 ஆகவும், TN 67 BV 4180 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** பின்னர் அன்றைய தினம் மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன ஜோதியம்மாள் மற்றும் ஜாஸ்மின்பேபி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் சஞ்சய் மனோஜ் அவர்களை விசாரித்தபோது ஜாஸ்மின் பேபி என்பவர் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை எடுத்து கொள்ளாமல் தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டதால் காயத்தின் தன்மை பற்றி கூறி இயலாது என்று வழங்கிய சான்றை பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் அன்றைய தினம் விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன ஜோதியம்மாள் மற்றும் புகார்தார் ஜாஸ்மின் ஆகியோருக்கு சிகிச்சை அளித்து ஜோதியம்மாளை மேல்சிகிச்சைக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்த மேற்படி மருத்துவ கல்லூரி மருத்துவர் காயத்ரி அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வழங்கிய ஜோதியம்மாள் என்பவரின் விபத்து பதிவேடு அசாஆ.11 ஆகவும், ஜாஸ்மின் என்பவரின் விபத்து பதிவேடு அசாஆ.12 ஆகவும், ஜாஸ்மின்பேபிக்கு மதுரை ஹானா ஜோசப் மருத்துவமனை வழங்கிய கருத்துரை கூய இயலாது என்று வழங்கிய சான்று அசாஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

5. பின்னர் அன்றையதினமே மதுரை அரசு இராஜாஜி மருத்துவ மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன ஜோதியம்மாளின் பிரேதத்தை பிரேத கூறாய்வு செய்த மேற்படி மருத்துவ கல்லூரி பேராசிரியர் முகமது நாசீம் அவர்களிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. பின்னர் அன்றைய தினம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட

அந்தோணிபிச்சை என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மனோன்மணி அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். ( **அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை வழங்கிய அந்தோணிபிச்சை என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று அசாஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**7.** பின்னர் அன்றைய தினமே பிரேத பரிசோதனைக்கு உடன் சென்ற தலைமை காவலர் சதீஷ்குமார், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் தசரதன் மற்றும் இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட சார்பு ஆய்வாளர் ராபியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

8. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மாரிமுத்து என்பவர் மீது சட்டப்பிரிவுகள் 279, 337, 304A இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்தில் ஈடுபட்ட பேருந்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் பேருந்தின் பின்புறத்தில் வலதுபக்கத்தில் சிராய்ப்பு சேதங்கள் இருந்ததாக காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ,10 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் வரிசை எண். 6ல் வாகனத்தை ஓட்டிய நபராக அசா.3 அந்தோணிபிச்சை காண்பிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வரிசை எண். 7ல் Driving License without Badge என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன விதிகளின்படி பயணிகளை ஆட்டோவை ஒருவர் இயக்க வேண்டும் என்றால் அவரிடம் Driving License with Badge இருக்கவேண்டும் என்றால் சரிதான். மேலும் மேற்படி ஆவணத்தில் வரிசை எண். 8ல் ஆட்டோவிற்கான Fitness Certificate இல்லை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரிசை எண். 9ல் ஆட்டோவிற்கான Permit ஆய்விற்கு கொடுக்கப்படவில்லை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வரிசை எண். 10ல் வாகனத்திற்கான Insurance ஆய்விற்கு கொடுக்கப்படவில்லை என்று

காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பயணிகள் ஆட்டோவை ஓட்டுவதற்கான முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் முறையாக சாட்சிகளை விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 41/2025** |
| Deposition of witness for | :: | **PW. 12** |
| **Name** | :: | **பாலமுருகன் ( காவல் ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**17.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் நக்சல் தடுப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.02.2024ம் தேதி நான் அருப்புக்கோட்டை தாலுகா வட்ட (பொறுப்பு) காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் ராபியம்மாவால் விசாரணை செய்யப்பட்ட அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண். 16/2024 பிரிவு 279, 337 இதசவின் கீழான வழக்கு கோப்பினை பார்வையிட்டு தொடர் விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கில் காயம்பட்ட ஜோதியம்மாள் என்பவர் மதுரை ஹானாஜோசப் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 279, 337 இதசவிலிருந்து 279, 337, 304A இதசவாக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்னர் மறுநாள் 15.02.2024ம் தேதி மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் காயம்பட்டு இறந்துபோன ஜோதியம்மாள் என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு காலை 09.00 மணி முதல் 10.30 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**3.** பின்னர் இறந்துபோன ஜோதியம்மாளின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத கூறாய்வு செய்ய வேண்டி தலைமை காவலர் சதீஷ்குமார் மூலம் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை அலுவல் அதிகாரிக்கு தக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தேன்.

4. அன்றைய தினம் புகார்தாரர் ஜாஸ்மின்பேபியை விசாரித்து மறுவாக்குமூலமும் சாட்சிகள் தாஸ், யோகேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலமும் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பினை அருப்புக்கோட்டை தாலுகா வட்ட காவல் ஆய்வாளராக பொறுப்பேற்ற ஆய்வாளர் முத்துலெட்சுமி அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** சொன்ன முறையில் சொன்ன நாள் தேதி நேரத்தில் சாட்சியங்களின் அடிப்படையில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சொன்ன முறையில் பிரேத விசாரணை அறிக்கையானது தயார் செய்யப்படவில்லை என்றாலும் சொன்ன முறையில் சாட்சிகளை விசாரணை செய்து மறுவாக்குமூலம் நான் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**